1984 மார்ச் 7]

திண்டிவனம் அரசினர் கலைக் கல்லூரிக் கட்டிடம்.

196. (*வினா எண் 18988) —திரு. கே. எம். தங்கமணி: மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் திரு. அ. கோவிந்தசாமி அரசினர் கலைக் கல்லூரியில் முதல் மாடி கட்டுவதற்கான செயற்திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) 1981-82 ஆம் நிதியாண்டில் இக்கல்லூரியில் முதல் மாடி கட்டுவதற்காக ரூ. 2·30 லட்சத்திற்கு ஆட்சி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. முதல் மாடியில் வகுப்பறைகள் கட்டும் வேலை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு தளம் வரையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி. காம்., பி.எஸ்ஸி., வகுப்புகள் துவக்கப்பட்டதால் அந்தக் கல்லூரியில் மாணவர்கள் படிப்புக்கு இட நெருக்கடி இருப்பது பற்றி அமைச்சர் அவர்கள் அங்கே நடந்த விழாவுக்கு வந்தபோது நேரடியாக உணர்ந்து இருக்கிறார்கள். வருகின்ற கல்வி ஆண்டில் புதிய பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவங்க கருணையோடு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க இருக்கின்ற காரணத்தால் உடனடியாக அந்த முதல் மாடி வகுப்புகளைக் கட்டி கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு தரப்பட்டிருக்கிற விவரம் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று கொடுத்திருக்கிறார்கள். வேலை ஆரம்பித்தால் சீக்கிரம் முடிப்பார்கள். அதற்கு மேல் ஒரு விவரம் தரப்பட்டிருக்கிறது. தற்போது போதிய மாணவர்கள் இல்லாத காரணத்தால் கல்லூரி விடுதி இயங்காமல் இருக்கிறது. கல்லூரி விடுதியை வகுப்பு அறையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வகுப்பு பற்றாக்குறையை பூர்த்தி செய்ய ஏதுவாக இருக்கும்.